# இலங்கையின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறை

## பற்றிய கைந்நூல்



The Asia Foundation

# இலங்கையின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறை பற்றிய கைந்நூல்

The Asia Foundation

தொகுப்பு – வரையறுக்கப்பட்ட சுற்றாடல் நிறுவனம்
ஆதரவு – ஆசிய மன்றம்

இந்த கைந்நூலானது ஒரு துரித குறிப்பு வழிகாட்டி மாத்திரமே. ஆழமான குறிப்புகளுக்கு தயவுசெய்து சம்பந்தப்பட்ட சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் கலந்தாலோசிக்கவும்.

இந்த வெளியீட்டின் மூலத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், இந்த வெளியீட்டை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மற்றும் எந்த வடிவத்திலும் ஏதும் கல்வித்தேவைகளுக்காக அல்லது இலாபகரமற்ற நோக்கங்களுக்காக பதிப்புரிமையாளரின் திட்டவட்டமான அனுமதியின்றி மறுபதிப்பு செய்யலாம்.

இந்த வெளியீட்டை மறுவிற்பனைக்காகவோ அல்லது ஏதும் வணிக நோக்கத்திற்காகவோ பதிப்புரிமையாளரின் முன் கூட்டிய எழுத்துமூல அனுமதியின்றி பயன்படுத்தக்கூடாது.

பதிப்புரிமை ©2022 வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) சுற்றாடல் நிறுவனம்

அச்சகம்: கலர் கிளாட் (பிரைவேட்) லிமிடெட் – பன்னிப்பிட்டிய

தொகுப்பு மற்றும் வெளியிடப்பட்டது: 2022 வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) சுற்றாடல் நிறுவனம்

*இந்த வெளியீடானது ‘இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் (EIA) கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் : முனைப்பான பொது மக்கள் ஈடுபாட்டின் முக்கியத்துவம்’ என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பாகமாக ஆசிய மன்றத்தின் நிதியுதவியின் கீழ் தயாரிக்கப்படுகின்றது.*

**கிடைக்குமிடம் :**
வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) சுற்றாடல் நிறுவனம்
இல.3 ஏ, 1ஆவது ஒழுங்கை, கிரிளப்பனை, கொழும்பு-5, இலங்கை.
தொலைபேசி; +94112890984 | இணையதளம்:www.efl.lk

# ஒப்புகை

இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயல்முறை பற்றிய கைந்நூலானது இலங்கையி;ல் காணப்படும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE) மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) செயன்முறையுடன் தொடர்புடைய தற்போதைய சட்டக் கட்டமைப்பு மற்றும் செயல்முறை பற்றிய முழுமையான ஒரு ஆய்வின் பின்னர் தொகுக்கப்பட்டது.

இலங்கையில் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (IEE- EIA) செயன்முறை சம்பந்தமாக காணப்படும் சட்டங்கள் பற்றிய இடைவெளிப்பகுப்பாய்வை மேற்கொள்ளும் முகமாக வரையறுக்கப்பட்ட சுற்றாடல் நிறுவனத்தை (EFL) தேர்தெடுத்தமைக்காக நாம் ஆசிய மன்றத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த கைந்நூலானது மேற்குறிப்பிட்ட இடைவெளிப்பகுப்பாய்வின் கண்டுபிடிப்புகள் மற்றும் இனங்காணப்பட்ட இடைவெளிகளுக்கு பரிகாரம் கண்ட பரிந்துரை அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது.

செயற்திட்டம் இடம்பெற்ற வேளையில் எமக்கு அருமதிப்புள்ள நுண்ணறிவையும் அறிவையும் பகிர்ந்து ஆதரவளித்த வளவாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு நாம் நன்றியை தெரிவிக்கின்றோம். மேலும், இந்த கைந்நூலை நிறைவு செய்வதற்கு எமக்கு பங்களிப்பு செய்த பலருக்கு நாம் நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் எமது ஆய்வுக்கு உதவிய தற்போதைய ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகளின் உரிமையாளர்களுக்கும் எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

இச்செயற்திட்டத்திற்கு வழிகாட்டல் மற்றும் ஆதரவை வழங்கிய வரையறுக்கப்பட்ட சுற்றாடல் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி. எரிக் விக்கிரமநாயக்க மற்றும் இச்செயற்திட்டத்தின் திட்டத் தலைவர் திரு. ஆனந்தலால் நாணயக்கார அவர்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த வெளியீட்டிற்காக ஆய்வை தொகுத்து ஆதரவளித்த ஒட்டுமொத்த வரையறுக்கப்பட்ட சுற்றாடல் நிறுவனத்தின் குழுவிற்கும் நாம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இலங்கையின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறை பற்றிய கைந்நூலானது இலங்கையில் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (IEE- EIA) செயன்முறையில் ஈடுபட்டுள்ள நீங்கள் உட்பட எல்லா பங்குதாரர்களுக்கும், வாசகர்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும், அபிவிருத்தி பணியாளர்களுக்கும், அரச அதிகாரசபைகள் மற்றும் பொதுமக்களுக்கும் உரியது.

# இந்தக் கைந்நூல் பற்றி

இந்தக் கைந்நூலானது வரையறுக்கப்பட்ட சுற்றாடல் (உத்தரவாதம்) நிறுவனத்தினால் சுற்றாடல் ஒழுங்குவிதிகளை முறையாக நடைமுறைப்படுத்துவதை ஆதரிக்கும் முகமாக அதற்கு வழங்கப்பட்டுள்ள ஆணையின் ஓர் பாகமாக தயாரிக்கப்படுகின்றது. இந்தக் கைந்நூலுக்கு ஆசிய மன்றத்தினால் நிதியளிக்கப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட சுற்றாடல் நிறுவனமானது (உத்தரவாதம்) சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) பற்றிய நடைமுறை வழிகாட்டலை வழங்கும் நோக்கத்துடன் இக்கைந்நூலை வழங்குகின்றது.

இந்தக் கைந்நூலில் பிரயோகிக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் மற்றும் விளக்கங்களானவை 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய சுற்றாடல் (திருத்தப்பட்ட) சட்டம், அதன் வழிகாட்டல்கள் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு செயன்முறை (EIA) தொடர்பில் பரிந்துரைக்கப்பட்ட ஏனைய விசேட சட்டங்கள் ஆகியவற்றில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டங்களாவன: 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவச் சட்டம், 1937 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தாவர, விலங்கினப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) செயன்முறையை அறிமுகப்படுத்திய அதன் திருத்தம், 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கொழும்பு மாநகர பொருளாதார ஆணைக்குழச் சட்டம் (இலங்கை சட்டத்தின் முதலீட்டுச் சபை), 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம் (அதனால் நீக்கப்பட்ட 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இல்கக சிலோன் சுற்றாடல் சபைச் சட்டம்) மற்றும் 1990 ஆம் அண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

இந்த வழிகாட்டியானது கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் செயற்படுத்துநர்கள், இந்த செயன்முறையில் சம்பந்தப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறை சம்பந்தமான உபகரணங்கள் அவசியமாகும் பொதுமக்கள் ஆகியோருக்கு எழுதப்பட்டுள்ளது. இக் கைந்நூலானது இந்த செயன்முறையில் பங்கேற்போருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இக் கைந்நூலானது சட்டங்கள், வழிகாட்டல்கள், பாய்ச்சற்படம், மற்றும் விளக்கப்படங்கள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியவற்றை கலந்தாலோசித்து சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறையுடன் (EIA) தொடர்புடைய தகவல்களை பரப்புவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## இந்த கைந்நூலின் நோக்கங்கள்

- இலங்கை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஒழுங்குவிதிகளுக்கு இணங்க சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் தேவைகளை பரப்புதல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறையில் பொதுமக்கள் பங்கேற்கும் முகமாக அவர்களுக்கு ஊக்கமளித்து வழிகாட்டல்களை வழங்குதல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறை பற்றிய படிகள் தொடர்பில் விழிப்பூட்டுதல் மற்றும் வழிகாட்டுதல்.

- சிறந்த திட்டமிடல் தீர்மானங்களுக்கு அனுசரணை வழங்கும் முகமாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு நடைமுறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை பரவச்செய்தல்

## இந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு கைந்நூல் யாருக் கானது ?

- சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளின் அரச உத்தியோகத்தர்கள்.
- சமுதாயம்
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறை பற்றிய விழிப்புணர்வு அவசியமாகும் சட்டம், சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் அபிவிருத்தி திட்டமிடல் ஆகிய துறைகளின் மாணவர்கள்.

**சுருக்கப்பெயர் பட்டியல்**

AC – ஆலோசனைச் சபை
BIQ - அடிப்படை தகவல் கேள்விக்கொத்து
CCCRMA - 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பேணல் மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டம்
CEA - மத்திய சுற்றாடல் அதிகார சபை
DG of CC - கரையோரப் பேணல் பணிப்பாளர் நாயகம்
EFL - வரையறுக்கப்பட்ட சுற்றாடல் நிறுவனம;
EIA - சுற்றாடல் தாக்க மதிப்பீடு
FFPO - 1937 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தாவர, விலங்கினப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம்
IEE - ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை
NEA - 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம்
NGO - அரசு சாரா நிறுவகம்
NWPES - 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேற்கு மாகாண சுற்றாடல் நியதிச்சட்டம்
TEC - தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு
TOR - ஆய்வெல்லை





# உள்ளடக்கம்


இந்தக் கைந்நூல் பற்றி iii
சுருக்கப்பெயர் பட்டியல் iv

அறிமுகம் 1
சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் நோக்கங்கள் 2
சுற்றாடல் தாக்க மதிப்பீட்டில் ஈடுபடுவோர் யார் மற்றும் அவர்களி;ன் பணி யாது? 3
சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE) ஆகியவற்றிக்கு இடையிலான வித்தியாசம் யாது? 4
விதித்துரைக்கப்பட்ட செயற்தி ட்டங்கள் எவை? 5
சுற்றாடல் தாக்க மதிப்பீடு அவசியமாகும் செயற்திட்டத்தை இனங்காண்பது எவ்வாறு? 5
சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை ஆகியவற்றை அங்கீகரிப்பவர் யார்? 7
இலங்கையின் கரையோரப் பகுதிகளிலுள்ள செயற் தி ட்டங்கள் 9
பேணப்படும் பிரதேசங்களுக்கு அன்மையில் செயற் தி ட்டங்கள் 10
வடமேல் மாகாணத்திலுள்ள செயற் தி ட்டங்கள் 11
சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு படிமுறைகள் 12
- பிரித்தறிதல் 13
- நுண்ணாய்வு 13
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் தயாரிப்பு 14
- பொதுமக்கள் பங்கேற்பு 15
- சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய தீர்மானம் 20
- கண்காணிப்பு 20

பூர்வாங்க தகவல் கோரிக்கைகள் என்பன யாவை? 21
செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையின் தீர்மானம் தொடர்பில் மேன் முறையீடு செய்யலாமா? 21
சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தலாமா? 21
சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகளில் பரிகாரம் காணப்படும் சுற்றாடல் தாக்கங்கள் யாவை? 22
சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறையின் எக்கட்டங்களில் பொது மக்களின் பங்கேற்பு வசியமாகின்றது? 23
நிறைவுபெற்ற செயற்றிட்டதின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்பவர்கள் யார்? 25

வரையறுக்கப்பட்ட சுற்றாடல் நிறுவனம் எவ்வாறு உதவுகின்றது? 26
மேற்கோள்களின் பட்டியல் 27

# அறிமுகம்

அபிவிருத்தி செயற்பாட்டில் "முன்னோக்கி செல்வதற்கு முன்னர் சிந்திக்க வேண்டும்" என்பதை முதலீட்டாளர்களும் அரசாங்கமும் பிரயோகிக்க முடியும் என்பதே சுற்றாடல் மதிப்பீட்டின் பொருளாகும். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (CEA) கூற்றுப்படி, சுற்றாடல் தாக்க மதிப்பீடானது (EIA) இயற்கை மற்றும் சமூகச் சுற்றுச்சூழல் மீது அபிவிருத்தியானது செலுத்தக்கூடிய சாத்தியமான தாக்கத்தை எதிர்வுகூறும் செயன்முறையாகும். ஆரம்பத்தில் சுற்றாடல் தாக்க மதிப்பீடானது (EIA) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோர பேண ல் சட்டத்தின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதுடன் இச்சட்டமானது கரையோர வலயத்திற்குள் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களுக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (EIA) சட்டரீதியான அவசியமாக்கியது. அதன் பின்னர், 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டமானது இலங்கை முழுவதும் விதிந்துரைக்கப்பட்ட அனைத்து செயற்திட்டங்களுக்கும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (EIA) அத்தியாவசியமாக்கியது.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் (EIA) நோக்கங்களுக்காக சுற்றாடலானது 3 பிரதான பகுதிகளை உள்ளடக்குகின்றது.



**பௌதிக அல்லது உயிர் அற்றவை**

(வளி, நிலம் மற்றும் நீர்)



**உயிருள்ளவை**

(தாவரங்கள் மற்றும் விலங்குகள்)



**சமூக**

(உட்கட்டமைப்பு, பொருளாதாரம், கலாசாரம்) ஆகியவற்றை தோற்றுவிக்கும் மக்கள் மற்றும் ஏனையவை)

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையில் பல நிறுவகங்கள் ஈடுபடுகின்றன: செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மைகளாக பணிக்கமர்த்தப்பட்ட அரச நிறுவகங்கள், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஆலோசனையாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பொதுமக்கள். இந்த கைந்நூல் பிரதானமாக பொதுமக்களை இலக்காகக் கொண்டுள்ளதுடன் அவர்களே சுற்றாடல்; தாக்க மதிப்பீட்டுச் (EIA) செயன்முறையின் முக்கியமான அங்கமாக விளங்குகின்றனர் ஆயினும், அடிக்கடி விடுபடுகின்றனர். இந்த கைந்நூலானது சட்டத்தை இலகுவாக்கி சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஒருங்கிணைத்து பொருத்தமான தகவல்களையும் வழங்குகின்றது.

இந்த கைந்நூலானது எளிமையான வினா பதில் மற்றும் சட்ட ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட முக்கிய சொற்பதங்களை விளக்கும் சிறிய தலைப்பிலான கலந்துரையாடல்கள் ஆகியவற்றுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. எளிமையான விளக்கங்கள், பாய்ச்சல் வரைபடம், விளக்கப்படம் ஆகியவை செயன்முறையை சிறந்த முறையில் புரிந்துகொள்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த வடிவமைப்பானது பின்வருமாறு:

- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் (EIA) நோக்கம் மற்றும் செயற்பரப்பு
- பிரதான சொற்பதங்களின் வரைவிலக்கணம்,
- செயன்முறையின் படிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள்,

## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் நோக்கங்கள்

- சுற்றாடல் தாக்க மதிப்பீடானது சுற்றாடல் கரிசனைகளுக்கு பரிகாரம் காண்கின்றது.
- சுற்றாடல் கரிசனைகளை தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையுடன் கூட்டிணைக்கின்றது.
- அபிவிருத்தி முன்மொழிகளின் பாரதூரமான விளைவுகளை எதிர்வுகூறவும் தவிர்க்கவும் அல்லது குறைக்கவும் உதவுகின்றது.
- சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகள் மற்றும் இயற்கை அமைப்பின் சூழலியல் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு பாதுகாப்பளிக்கின்றது.
- வளப்பயன்பாடு மற்றும் முகாமைத்துவ வாய்ப்புகள் ஆகியவற்றின் உச்சபயன்பாட்டுக்கு வழிசமைக்கும் நிலையான அபிவிருத்திக்கு வலுவூட்டுகின்றது.
- ஒரு செயற்றிட்டத்தின் அபாயகர விளைவுகளின் பின்னர் ஏற்படும் பண விரயம் மற்றும் நேரத்தை மிச்சப்படுத்துகின்றது.
- எளிமையாக கூறுவதாயின், சுற்றாடல் தாக்க மதிப்பீடானது மனித மற்றும் விலங்குகளின் உயிருக்கு பாதுகாப்பளிக்கக்கூடியதாகவும் வளங்களின் விரயத்தை தடுக்கக்கூடியதாகவும் உள்ளது.



## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டில் ஈடுபடுவோர் யார் மற்றும் அவர்களின் பணி யாது?

- செயற்றிட்ட முன்மொழிவாளர் (PP)/ செயற்றிட்டத்தை முன்மொழிவோர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பர்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்கள்- செயற்றிட்ட முன்மொழிவாளரால் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை தயாரிக்குமாறு பணிக்கமர்த்தப்படுவர். சம்பந்தப்பட்ட அறிக்கையானது ஈடுபட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகளை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.
- செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மை (PAA)- 1997.06.04 ஆம் திகதிய 978/13 ஆம் இலக்க மற்றும் 2004.12.29 ஆம் திகதிய 1373/6 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையால் திருத்தியமைக்கப்பட்ட 1993.06.24 ஆம் திகதிய 722/22 ஆம் இலக்க மற்றும் 1995.02.23 ஆம் திகதிய 859/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் உள்ளடங்கியவாறு தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23ய இன் பிரகாரம் அவர்கள் பணிக்கமர்த்தப்படுகின்றனர்
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) - சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மீளாய்வு செய்யும். இது ஒவ்வொரு ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கும் (IEE/EIA) தாபிக்கப்படும் ஒரு தற்காலிக குழுவாகும். இக்குழுவானது தொழல்நுட்ப வல்லுனர்களைக் கொண்டுள்ளதுடன் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் பயன்படுத்துவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை தயாரிக்கும் பொறுப்பையும் வகிக்கின்றது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவின் (EIA Cell) உறுப்பினர் ஒருவரால் தலைமை வகிக்கப்படல் வேண்டும். அத்துடன் இக்குழுவானது மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள் அனைத்தையும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு மேற்பார்வைக்குழுவிற்கு தெரிவிக்கவும் வேண்டும்
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவு- இப்பிரிவானது ஒவ்வொரு விடயப் பரப்பிற்குமான ஒவ்வொரு செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்குள் தாபிக்கப்படுகின்றது. இப்பிரிவானது செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மைக்குள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. அவர்கள் செயற்றிட்ட முன்மொழிவாளர்களுடன் தொடர்புகொள்வர்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு மேற்பார்வைக்குழு- இக்குழுவானது செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையின் பிரதான பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது. இக்குழுவின் ஓர் பார்வையாளராக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிநிதியொருவர் இருப்பார். இக்குழுவானது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மீளாய்வு செய்து சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறை தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆலோசனை வழங்குவதுடன் செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையானது சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் தேசிய சுற்றாடல் சட்டத்தின் தேவைகளுடன் இணங்குகின்றதா என்பதையும் மேற்பார்வை செய்கின்றதுடன் நிறைவடைந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்றிட்ட தீர்மானங்களை மேற்கொண்டு பிரச்சினைகளை ஆய்வுசெய்து பரிந்துரைகளையும் முன்வைக்கின்றது.

# சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE) ஆகியவற்றிக்கு இடையிலான வித்தியாசம் யாது?

இந்த வித்தியாசமானது தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 33 இற்கு இணங்க குறைந்தளவு சுற்றாடல் தாக்கமுள்ள செயற்றிட்டங்களுக்கு ஒரு ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு கணிசமான சுற்றாடல் தாக்கமுள்ள செயற்றிட்டமொன்று சம்பந்தமாக சுற்றாடல் தாக்க மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வரைவிலக்கணமானது ஏனைய நியதிச்சட்டங்களால் பிரதிபலிக்கின்றது.

## ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE)

- ஒரு எழுத்திலான அறிக்கை.
- சுற்றாடல் மீது ஒரு விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டத்தினால் ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்களை அழுத்தக்கூறுகின்றது.
- இந்தத் தாக்கங்களானவை கணிசமானவை மற்றும் அமைச்சரால் விதித்துரைக்கப்பட்டதைப்போன்று மேலதிக விபரங்களுடன் சுற்றாடல் தாக்க மதிப்பீடொன்று அவசியமாகுமா என்று தீர்மானிக்கும் கருத்தைக் கொண்டுள்ளது.

## சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA)

- ஒரு விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டம் பற்றிய எழுத்திலான பகுப்பாய்வு.
- ஒரு சுற்றாடல் செலவு- நன்மை பகுப்பாய்வை உள்ளடக்குகின்றது (அத்தகைய பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டால்)
- முன்மொழியப்பட்ட விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டத்தின் தவிர்க்கக்கூடிய மற்றும் தவிர்க்கமுடியாத பாரதூரமான சுற்றாடல் விளைவுகள் பற்றிய விளக்கமொன்றை உள்ளடக்குகின்றது.
- சுற்றாடலுக்கு குறைந்தளவு தீமையை விளைவிக்கக்கூடிய செயற்பாட்டிற்கான மாற்றுவழிகளையும் அம்மாற்றுவழிகள் ஏன் நிராகரிக்கப்பட்டன என்பதற்கான காரணங்களை உள்ளடக்கிய விளக்கமொன்றை உள்ளடக்குகின்றது.
- அவசியமான வளங்களின் மீளமுடியாத, மீட்டெடுக்கமுடியாத அர்ப்பணிப்புகள் பற்றிய விளக்கமொன்றை உள்ளடக்குகின்றது.

# விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் எவை?

தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23ர பிரிவிற்கிணங்க சுற்றாடல் தாக்க மதிப்பீடு அவசியமாகும் செயற்றிட்டங்கள் விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் ஆகும். செயற்றிட்டத்தின் அளவு மற்றும் அமைவிடத்தின் அடிப்படையில் அமைச்சரால் விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. இவை 1993.11.05 ஆம் திகதிய 772/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் பட்டியலிடப்பட்டுள்ளன என்பதுடன் 05.11.1999 ஆம் திகதிய 1104/22 ஆம் இலக்க மற்றும் 1995.02.23 ஆம் திகதிய 859/ 14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளினால் திருத்தப்பட்டுள்ளன. .

# சுற்றாடல் தாக்க மதிப்பீடு அவசியமாகும் செயற்றிட்டத்தை இனங்காண்பது எவ்வாறு?

சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) அவசியமாகும் செயற்றிட்ங்கள் விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன. “சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் பற்றிய எளிய வினாக்கள் மற்றும் பதில்கள்” என்ற தலைப்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பிரசுரிக்கப்பட்ட கைந்நூலானது குறிப்பிட்ட ஒரு செயற்றிட்டத்திற்கு சுற்றாடல் தாக்க மதிப்பீடானது அவசியமா அல்லது இல்லையா என்பதை இனங்காண்பதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது.



சுற்றாடல் தாக்க மதிப்பீடானது ஒரு குறித்த செயற்றிட்டத்திற்கு அவசியமானதா என்பதை இனங்காண்பதற்கு பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றலாம்:

a. மத்திய சுற்றாடல் அதிகார சபையை (CEA) தொடர்பு கொள்ளல்- அடிப்படை தகவல் கேள்விக்கொத்தை நிரப்பியதன் (BIQ) பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது சம்பந்தப்பட்ட செயற்றிட்டத்திற்கு சுற்றாடல் தாக்க மதிப்பீடு அத்தியாவசியமா என்பதை தெரிவிக்கும்.
   i. அடிப்படை தகவல் கேள்விக்கொத்தானது (BIQ) மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைமையகத்தில் அமைந்துள்ள சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவில் அல்லது மத்திய சுற்றாடல் அதிகார சபை மாகாண அலுவலகங்களில் கிடைக்கக் கூடியதாக உள்ளது.
   ii. இதனை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
b. வடமேல் மாகாணத்தைதவிர வேறு ஏதும் இடத்தில் செயற்றிட்டம் அமைந்திருப்பின் 05.11.1999 ஆம் திகதிய 1104/22 ஆம் இலக்க மற்றும் 23.02.1995 ஆம் திகதிய 859/ 14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகைகள் மூலம் திருத்தப்பட்ட 24.06.1993 ஆம் திகதிய 772/22 ஆம் இலக்க விசேட வர்த்தமானியை பார்க்கவும்.
c. முன்மொழியப்பட்ட செயற்றிட்டமானது வடமேல் மாகாணத்தில் அமைந்திருந்தால் வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையை தொடர்பு கொள்ளவும்.
d. முன்மொழியப்பட்ட செயற்றிட்டமானது கரையோர வலயத்திற்குள் அமைந்திருக்குமாயின் கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தை தொடர்பு கொள்ளவும்.
   i. கரையோர வலயம் என்றால் சராசரிக் கடல் மட்ட எல்லைக் கோட்டில் இருந்து நிலம் நோக்கி 300 மீற்றர் தூரத்தினுள் உள்ள காணிப்பரப்பு எனவும், கடல் மட்ட எல்லைக் கோட்டிலிருந்து கடல் நோக்கி 2 கிலோ மீற்றர் தூரத்தினுள் உள்ள கடல் பரப்பு எனவும் பொருளாகும்.
   ii. கடல் நீரேரிகளின் அல்லது வேறு எவையேனும் நீர்நிலைகளின் விடையத்தில் நிலம் நோக்கிய எல்லைக் கோடானது இயற்கை புகுவழி முனைகளுக்கு இடையே வரையப்பட்ட நேரான மூலக்கோட்டிற்கு செங்குத்தாக அளவிடப்பட்ட இரண்டு கிலோ மீற்றர்களைக் கொண்ட ஒரு வரையறைவரை நிலம்.
   iii. மேலும் கடலுடன் இணைக்கப்பட்டுள்ள எந்தவொரு நீர்நிலையையும் உள்ளடக்கும், அத்துடன் சுற்றளவில் உள்ள பூஜ்ஜிய சராசரி கடல் மட்டத்திலிருந்து உள்நாட்டிற்கு மேலும் நூறு மீட்டர் வரை நீட்டிக்கப்பட்ட எல்லைக்குள் இருக்கும் பகுதியையும் உள்ளடக்கும்.
e. முன்மொழியப்பட்ட செயற்றிட்டமானது தேசிய ஒதுக்கிடத்தின் எல்லையில் இருந்து 01 மைலுக்குள் அமைந்திருந்தால் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தை தொடர்பு கொள்ளவும்.





# சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை ஆகியவற்றை அங்கீகரிப்பவர் யார்?

ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளை அங்கீகரித்தல் பற்றிய தீர்மானங்களானவை சம்பந்தப்பட்ட செயற்றிட்ட அங்கீகரிக்கும் முகவராண்மையால் (PAA) வழங்கப்படுகின்றன. சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களானவை 23.02.1995 ஆம் திகதிய 859/14 ஆம் இலக்க, 04.06.1997 ஆம் திகதிய 978/13 ஆம் இலக்க மற்றும் 29.12.2004 ஆம் திகதிய 1373/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகைகளால் செயற்றிட்ட அங்கீகரிக்கும் முகவராண்மைகளாக பணிக்கமர்த்தப்படுகின்றன. அவை பின்வருமாறு:

a. பின்வரும் விடயதானங்கள் வழங்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் செயற்றிட்ட அங்கீகரிக்கும் முகவராண்மைகளாக இனங்காணப்படுகின்றன. தேசிய திட்டமிடல், நீர்பாசனம், சக்திவலு, விவசாயம், காணி, வனங்கள், கைத்தொழில், வீடமைப்பு, கட்டுமானம், போக்குவரத்து, நெடுஞ்சாலை, மீன்வளம், நீர்வாழ்வளங்கள், தோட்டத் தொழில்.
b. கரையோரம் பேணல் திணைக்களம்
c. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்
d. வனத் திணைக்களம்
e. மத்திய சுற்றாடல் அதிகார சபை
f. நகர அபிவிருத்தி அதிகார சபை
g. புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகம்
h. இலங்கை சுற்றுலாச் சபை
i. இலங்கை மகாவலி அதிகார சபை
j. இலங்கை முதலீட்டுச் சபை

செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமிக்கின்றதுடன் இக்குழுவானது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மதிப்பீடு செய்து அதன் அவதானிப்புகளை சமர்ப்பிக்கின்றது. இந்த அவதானிப்புகளானவை செயற்றிட்ட அங்கீகரிக்கும் முகவராண்மை அதன் தீர்மானத்தை மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கு வழிகாட்டுகின்றன.

செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையின் (PAA) பொதுவான வழிகாட்டிகளுக்கு

இணங்க சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறை தொடர்பில் செயற்றிட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மைக்குள்ள கடமைகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை வழங்குகின்றது:எல்லா விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் தேவைகளுக்கு உட்படுகின்றனவா என்பதை உறுதிசெய்தல்.

- ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பற்றிய முறையான நோக்கெல்லை செயல்முறைகளை உறுதிசெய்து வழிகாட்டல்.
- ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பற்றிய ஆய்வெல்லையை வரைவு செய்தல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டை தாபித்தல், நடாத்துதல் மற்றும் பங்கேற்றல் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பின் போதும் பின்னரும் மீளாய்வு செய்தல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் பொது மக்களின் மீளாய்வுக்காக பொது அறிவித்தல் விடுத்து கிடைக்கக்கூடியதாக உள்ளதாவென்பதை உறுதிசெய்தல்
- பொது மக்கள் மற்றும் ஏனைய முகவராண்மைகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கருத்துக்களை மதிப்பீடு செய்து பதிலளித்தல்
- அவசியமான தடுப்பு நடவடிக்கைகளை தாபித்து, அவை ஏதேனும் அனுமதிச்சீட்டில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்தல்.
- பயனுறுதியான கண்காணிப்பின் ஊடாக நிபந்தனைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்தல்.







# இலங்கையின் கரையோரப் பகுதிகளிலுள்ள செயற்றிட்டங்கள்

கரையோர வலயத்தில் இடம்பெறும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பில் 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோர பேணல் மற்றும் கரையோர வலய முகாமைத்துவ சட்டமானது பிரயோகத்திலுள்ளது. இச்சட்டமானது கரையோர வலயத்தில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அனுமதியளித்தல் விடயத்தில் ஏனைய எல்லாச் சட்டங்களையும், திருத்தப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்தையும் உள்ளடக்குகின்றது. கரையோரம் பேணல் மற்றும் கரையோர வலய முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம் (DG of CC) எந்தெந்த செயற்றிட்டங்கள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையை பின்பற்ற வேண்டும் என்று இனங்காணும் தற்துணிவை கொண்டுள்ளார்.

- **14 ஆம் பிரிவு** – கரையோர வலயத்திற்குள் இடம்பெறக்கூடிய எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர வலய முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதியொன்று அவசியமாகின்றது.
- **15 ஆம் பிரிவு** – மேற்படி அனுமதியை வழங்கும் வேளையில் பல்வேறு காரணிகளை கரையோரம் பேணல் மற்றும் கரையோர வலய முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம் பரிசீலனையில் எடுப்பார்.
- **16 ஆம் பிரிவு** – கரையோரம் பேணல் மற்றும் கரையோர வலய முகாமைத்துவ பணிப்பாளர் நாயகமானவர் மேற்படி அனுமதியை கோரும் விண்ணப்பதாரியிடம் இருந்து ஒரு ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை (IEE) அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீடு (EIA) அல்லது இரண்டையும் கோரலாம். ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையில் உள்ள தகவல்கள் போதுமானதாக இருப்பின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கான அவசியம் எழாது. இந்த ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையானது ஆலோசனை சபையின் (AC) கருத்துரையை பெற்றுக்கொள்ளும் முகமாக அதற்கு அனுப்பப்படுகின்றது. ஆலோசனை சபையானது அதன் கருத்துரையை 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும். இந்த ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையானது போதுமானதாக இல்லாதிருப்பின் கரையோரம் பேணல் மற்றும் கரையோர வலய முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்திற்கு ஒரு சுற்றாடல் தாக்க மதிப்பீடும் அவசியப்படலாம். சுற்றாடல் தாக்க மதிப்பீடானது கிடைக்கப்பெற்றதும் பணிப்பாளர் நாயகம் அதன் பிரதியொன்றை 60 நாட்களுக்குள் ஆலோசனை சபைக்கு சமர்ப்பிப்பதுடன் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிவித்தல் விடுக்கப்பட்டு 30 நாட்களுக்குள் பொது மக்கள் தமது கருத்துரையை பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு வழிசமைக்கும் வகையில் அதனை வர்த்தமானியில் வெளியிடுவார். பணிப்பாளர் நாயகம் அனுமதியை வழங்குவதற்கு தீர்மானிக்கும் வேளையில், கிடைக்கப்பெற்ற அனைத்து கருத்துரைகளையும் 60 நாட்களுக்குள் பரிசீலனைக்கு உட்படுத்துவார்.

## பேணப்படும் பிரதேசங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள செயற்றிட்டங்கள்

1937 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தாவர, விலங்கின பாதுகாப்புச் கட்டளைச்சட்டத்தின் (FFPO) ஏற்பாடுகள் தேசிய ஒதுக்கிட சுற்றுப்புறங்களில் இடம்பெறும் தேசிய ஒதுக்கிடம் மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு பிரயோகிக்கப்படும். தாவர, விலங்கின பாதுகாப்புச் கட்டளைச்சட்டத்தின் கீழுள்ள செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகும்.

**9 (அ) பிரிவு** – தேசிய ஒதுக்கிடத்தின் எல்லையில் இருந்து 1 மைல் தூரத்தினுள் (1.6 km) வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்திலான முன்னங்கிகாரத்தை பெறாமல் எத்தகைய அமைப்பும் அபிவிருத்தி நடவடிக்கையை ஒன்றை நிறைவேற்றுதல் ஆகாது.

பணிப்பாளர் அத்தகைய அபிவிருத்தி செயற்பாடு தொடர்பாக ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கை (IEE) அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கையொன்றை பணிப்பாளர் நாயகம் கோரலாம் என்பதுடன் அவர் அதன் பிரதியொன்றையும் 60 நாட்களுக்குள் கருத்துரை வழங்கும் முகமாக குழுவிற்கு சமர்ப்பிப்பார்.

ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய அறிவித்தல் வெளியிடப்படுவதுடன் அத்தகைய அறிவித்தல் விடுக்கப்பட்டு 30 நாட்களுக்குள் பொது மக்கள் தமது கருத்துரையை பணிப்பாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். பணிப்பாளர் நாயகம் கிடைக்கப்பெற்ற எல்லா கருத்துக்களையும் பரிசீலனையில் எடுத்து அத்தகைய கருத்துரைகள் கிடைக்கப்பெற்று 60 நாட்களுக்குள் அனுமதி வழங்குவது குறித்து தீர்மானிப்பார்.







## வடமேல் மாகாணத்திலுள்ள செயற்றிட்டங்கள்

இதுவொரு  மாகாண நியதிச்சட்டம் என்பதுடன் வடமேல் மாகாணமே  சொந்த சுற்றாடல் நியதிச்சட்டத்தை தன்னகத்தே கொண்டுள்ள ஒரேயொரு மாகாணமாகும்.

இந்த நியதிச்சட்டமானது அதன் சொந்த சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறை மற்றும்  மாகாணத்திற்குள் இடம்பெறும் செயற்றிட்ட அங்கீகாரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது- அதாவது மத்திய சுற்றாடல் சபையால் முகாமைத்துவம் செய்யப்படும் மத்திய செயன்முறைக்கு புறம்பாகவே இது இடம்பெறுகின்றது.

- **43 ஆம் பிரிவு** - வடமேல் மாகாணத்திற்குள் ஏதுமொரு அமைப்பால்  முன்னெடுக்கப்படும் விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் எல்லாவற்றிக்கும் சம்பந்தப்பட்ட செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகளிடம் ( PAA)  அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- **44ஆம் பிரிவு** – மாகாணத்திற்குள் விதித்துரைக்கப்பட்ட உத்தேச செயற்றிட்டத்திற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (IEE -EIA) தேவைப்படும். பொது மக்கள்  ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பற்றிய தமது கருத்துரைகளை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 30 நாட்களுள் அனுப்பும் முகமாக அவை கிடைக்கக்கூடியதாக  உள்ளதென்பதை தெரிவித்து சில பத்திரிகைகளில்  பிரசுரிக்கப்படும். பொது விசாரணையொன்று இடம்பெறலாம். சம்பந்தப்பட்ட செயற்றிட்டமானது அங்கீகரிக்கப்பட்டதும், அனுமதியானது வர்த்தமானியில் வெளியிடப்பட்டு சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.
- **45ஆம் பிரிவு** – செயற்றிட்ட அங்கீகாரத்திற்கான செயல்முறையை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவாண்மைகள் தீர்மானிக்கும்.
- **46ஆம் பிரிவு** – செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது அனுமதியை வழங்காத வேளையில், செயற்றிட்ட முன்மொழிவாளர் அமைச்சின் செயலாளருக்கு மேன் முறையீடு செய்யலாம். செயலாளர் ஆலோசனை சபையின் அவதானிப்புகளை பெற்றுக்கொள்ளும் பட்சத்தில், அவரின் தீர்மானமே இறுதியாகும்.
- **47ஆம் பிரிவு** – அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டால் அல்லது செயற்றிட்டம் கைவிடப்பட்டால் நடவடிக்கை மேற்கொள்ளும் முகமாக அதனை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு அறிவிக்க வேண்டும். மாற்றங்களுக்கு புதிய அங்கீகாரம் அவசியப்படும்.
- **48 ஆம் பிரிவு** – செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது அனுமதியளிக்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டம் தொடர்பில் வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

# சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு படிமுறைகள்




## பிரித்தறிதல்

இதுதான் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையின் முதல் படிமுறையாகும் என்பதுடன் ஒரு சுற்றாடல் தாக்க மதிப்பீடு அவசியமா அல்லது இல்லையா என்ற தீர்மானத்தை மேற்கொள்வதற்கான வழியையும் சமைக்கின்றது. இந்தப் படிமுறையானது முன்மொழியப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் தாக்கத்தை உறுதிச்செய்வதில் உதவியளிக்கின்றது. பிரத்தறிதல் செயற்பாட்டடை நடாத்துவதற்கான நிர்ணயமானது செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையால் வடிவமைக்கப்படுகின்றது.

## நுண்ணாய்வு

இச்செயற்பாடானது மதிப்பீட்டின் வேளையில் முக்கியமான பிரச்சினைகளை இனங்காண்பதற்கு வழிசமைக்கின்றது. மேலும் இச்செயற்பாடு மதிப்பீட்டின் வேலைச்சட்டகம் அல்லது எல்லைகளை வடிவமைக்கின்றதுடன், ஆய்வெல்லையை கொண்டுள்ளது (TOR).

இலங்கையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறை இல 2(மத்திய சுற்றாடல் அதிகார சபை) நடைமுறைபடுத்துவதற்கான வழிகாட்டி- சுற்றாடல் நுண்ணாய்வை நடாத்துவதற்கான ஒரு பொது வழிகாட்டிக்கு இணங்க, நுண்ணாய்வை நடாத்துவதற்கு ஐந்து படிமுறைகள் காணப்படுகின்றன.

1. பூர்வாங்க தகவல்- இக்கட்டத்தில் முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தி;ன் இயல்பு, பரப்பெல்லை மற்றும் அமைவிடம் பற்றிய தகவல்கள் மற்றும் அமைவிடத்தின் வரைபடங்கள் மற்றும் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு அவசியமாகும் வேறு ஏதும் தகவல்கள் உள்ளடக்கியவாறு செயற்றிட்ட முன்மொழிவாளரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. சுற்றாடல் பரப்பெல்லையிடல்- இது ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டில் பரிகாரம் காணவேண்டிய முக்கியமான பிர்சசினைகளை இனங்காணும் செயற்பாடாகும்.
3. பொது மக்கள் பங்கேற்பு- பொது மக்கள் பங்கேற்புக்கான ஏற்பாடுகள் தேசிய சுற்றாடல் சட்டத்தில் அடங்கியுள்ளதால் இது செயன்முறையின் மிகவும் முக்கியமான அம்சமாகும்.
4. தீர்மானம் மேற்கொள்ளல்- இக்கட்டத்தில் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டவாறு ஒன்றில் அனுமதியை வழங்கலாம் அல்லது முன்மொழியப்பட்ட ஒரு செயற்றிட்டத்தை நிராகரிக்கலாம்.
5. கண்காணிப்பு- செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பானது நிபந்தனைகள் மற்றும் பயனுறுதியான தணிப்பு நடவடிக்கைகள் சகிதம் இணக்கப்பாட்டை உள்ளடக்குகின்றது.

வழிகாட்டி முறைகளின் பிரகாரம் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது :

- பரப்பெல்லை ஆவணத்திற்கான பக்க வரம்பை விதிக்கலாம்
- ஒரு அட்டவணை மற்றும் காலக் கோட்டை விதிக்கலாம்
- துறைகள் மற்றும் அவசியமான நிபுணத்துவம் ஆகியவற்றை இனங்காணலாம்
- முன்கூட்டியபட பரப்பெல்லையிடல் கூட்டங்களை கூட்டலாம்

## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் தயாரிப்பு

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு தயாரிப்பானது செயற்றிட்ட முன்மொழிவாளரின் கடமையாகும். தயாரிப்பதற்கான காலக்கெடு விதிக்கப்படவில்லை. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையானது முக்கியமான செயற்றிட்ட பாகங்களின் தொகுப்பாகும்.

அறிக்கையானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது :

- செயற்றிட்டத்தின் ஒரு விவரணம்
- சமூக மற்றும் சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு
- தணிப்பு நடவடிக்கைகள்
- முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திட்டங்கள்







## பொதுமக்கள் பங்கேற்பு

அரசியலமைப்பின் உறுப்புரை 28(ஊ) பிரகாரம் இயற்கையைப் பாதுகாப்பதும் மற்றும் அதன் செல்வ வளங்களைப் பாதுகாப்பதும் இலங்கையில் வாழும் ஒவ்வொரு நபரினதும் கடமையாகும். ஆகையால், சுற்றாடல் தாக்க மதிப்பிட்டு செயன்முறையில் 'பொது மக்கள் பங்கேற்பதென்பது' சனநாயகத்தில் தீர்மானம் மேற்கொள்வதில் இறைமையுள்ள மக்களுக்குள்ள பங்கேற்பு உரிமையை குறிக்கின்றது. யாதுமொரு நபரின் இயற்கை சுற்றாடலில் ஏற்படும் ஒரு மாற்றமானது அவருக்கு உரித்தாக உள்ள பல அடிப்படை உரிமைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது: ஆகையால், ஒரு முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தின் முக்கிய பங்குதார்களாக பிரசைகள் உள்ளதால் அவர்களுக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) செயன்முறையில் பங்கேற்கும் சட்டரீதியான கட்டாயக் கடமையாக உள்ளது.

**“பொதுமக்கள்” என்றால் யார்?**
இச்சொல்லானது தனிநபர்கள், உள்ளூர் சமூகங்கள், பெண்கள், ஆண்கள், இளைஞர் மற்றும் அரசசாரா நிறுவனங்கள் (NGO) ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மேலும் இது அபிவிருத்தி அமைவிடத்திற்கு அன்மையில் வசிக்கும் சமூகங்களான 'பாதிக்கப்பட்ட தரப்பினரையும்' மற்றும் சுற்றுச்சூழல் விடயங்களில் அதீத பிரதிபளிப்பை காட்டும் 'ஆர்வமுள்ள தரப்பினர்' ஆகியோரையும் உள்ளடக்க வேண்டும்.

உதாரணம் : *எப்பாவெல வழக்கு* [2000] - நியதிச்சட்ட அல்லது சட்ட நிபுணர்கள், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வரும் கருத்துரைகள் மற்றும் தனிப்பட்டவர்களிடம் இருந்து வரும் கருத்துரைகள் பொதுமக்கள் கருத்துக்களாக வரவேற்கப்படும்.

தேசிய சுற்றாடல் சட்டமானது (NEA) பொதுமக்கள் பங்கேற்றலை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையின் ஒரு படிமுறையாக அங்கீகரிக்கின்றது. பொதுமக்கள் மீளாய்வுக்காக ஒரு முறை தயாரிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பற்றிய அறிவித்தலானது பத்திரிகைகளில் சிங்களம், ஆங்கிளம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படல் வேண்டும். பொதுமக்களின் கருத்துக்களுக்காக முப்பது நாட்கள் வழங்கப்படுகின்றன.

பொதுமக்கள் கருத்துக்களானவை செயற்றிட்ட முன்மொழிவாளரின் மீளாய்வு மற்றும் மறுமொழிக்காக அனுப்பப்படுகின்றதுடன் அவை முன்மொழியப்பட்ட நடவடிக்கை மற்றும் கூடிய கரிசனை செலுத்தி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட துணை தகவல்கள், மேற்கொண்ட உண்மையான திருத்தங்கள் உட்பட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு மாற்றியமைத்து மாற்றீடுகளையும் அறிமுகம் செய்யும் வகையில் பதிலளிக்கப்படல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது இவ்விடயத்தை தீர்மானிக்குமாயின், பொது விசாரணையொன்று வழங்கப்படும்.

**பொது விசாரணை செயன்முறை :** செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மை பொது விசாரணையொன்று இடம்பெறல் வேண்டுமென்று தீர்மானித்தால், எழுத்துமூல கருத்துரைகளை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு சமர்ப்பித்த பொதுமக்களின் உறுப்பினர்கள் பொது விசாரணையொன்றுக்கு அழைக்கப்படுவர்.

ஓர் உதாரணமாக, மேல் கொத்மலை நீர்மின் வழக்கானது அமைந்துள்ளது. இங்கு ஒரு தீர்வாக பொது விசாரணையொன்று வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மண்றத்திற்கு (EFL) வழங்கப்பட்டது.

ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீடு செயன்முறையில் பொதுமக்களின் பங்கேற்பு தொடர்பான சில பொருத்தமான தகவல்கள் இங்கே வழங்கப்பட்டுள்ளன.

## ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை தொடர்பில் பொதுமக்கள் கருத்துரைக்க முடியுமா?

தேசிய சுற்றாடல் சட்டம் (NEA) மற்றும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ் சட்டத்தின் (CCCRMA) பிரகாரம், ஆரம்ப சுற்றாடல் பரிசோனை தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. தேசிய சுற்றாடல் சட்டமானது ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையை பொது ஆவணமொன்றாக மட்டுமே கருதுவதால் அது பொதுமக்களின் கருத்துரைக்கு அல்லாது பரிசீலனைக்கு மாத்திரமே திறந்துள்ளது. ஆயினும், தாவர, விலங்கினப் பாதுகாப்பு கட்டளைச்சட்டம் (FFPO) மற்றும் வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டம் (NWPES) ஆகிய சட்டங்களின் கீழ் ஆரம்ப சுற்றாடல் பரசோதனையானது பொதுமக்களின் கருத்துரைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு சட்டத்திலும் பொதுமக்கள் பங்கேற்கக்கூடிய கால வரையரை என்ன?

பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிக்கு இணங்க 30 நாள் கால வரையறை மாறுபடும். உதாரணம்: தமிழ் அறிவித்தல் பத்திரிகையில் நவம்பர் 10ஆம் திகதி வெளியிட்ப்படும் அதே வேளையில் சிங்கள அறிவித்தல் பத்திரிகையில் நவம்பர் 01 ஆம் திகதியில் வெளியிடப்படுமாயின், 30 நாட்கள் நவம்பர் 10ஆம் திகதியிலிருந்தே கணக்கிடப்படும்.





பொதுமக்கள் கருத்துரைகள் பற்றிய ஒழுங்குவிதிகள் பின்வருமாறு:

- தேசிய சுற்றாடல் சட்டம் -அறிவித்தல் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள்.
- கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் பாதுகாப்பு முகாமைத்துவ சட்டம் -வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள்.
- தாவர விலங்கினப் பாதுகாப்பு கட்டளைச்சட்டம் - வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள்.
- வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டம் - அறிவித்தல் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் .




## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளை பொதுமக்கள் எங்கு அணுகலாம்?

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளை பொதுமக்களின் வாசிப்புக்காக இலகுவில் கிடைக்கக்கூடியதாக வழிசமைக்கும் வகையில் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகள் செயன்முறைகளை தாபிக்க வேண்டும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வழிகாட்டிநூல் தெரிவிக்கின்றது.
அத்தகைய இடங்களாவன கொழும்பு (CEA நூலகம், பத்தரமுல்லை), மாவட்ட அலுவலகம், பிரதேச சபை மற்றும் செயற்றிட்டம் முன்மொழியப்படும் அமைவிடத்திலுள்ள பிரதேச செயலகம். சம்பந்தப்பட்ட செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகளிலும் அறிக்கைகள் கிடைக்கக்கூடியதாய் இருக்கும். செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகளானவை பொதுமக்களின் வேண்டுகோள் மற்றும் மீளாக்க செலவினம் அறவிடப்பட்டதைத்தொடர்ந்து சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரதிகள் கிடைக்கக்கூடிய வினைத்திறன்மிக்க வழிமுறைகளை தாபிக்க வேண்டும். சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகளின் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமாகவுள்ளது என்பதை சமீபத்திய நடைமுறை அனுபவங்கள் காட்டுகின்றன.

## பொதுமக்கள் தமது கருத்துரைகளை சமர்ப்பித்தன் பின்னர் அவர்களுக்கு ஏற்பறிவிப்பு கிடைக்குமா?

அநேகமான வேளைகளில் ஏற்பறிவிப்பு வழங்கப்படுவதில்லை. இருப்பினும், பொதுமக்கள் கருத்துரைகள் எழுத்துவடிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால், கருத்துரைகள் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டால், செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையால் கையொப்பமிட்டு வழங்கப்படும் தபால் இரசீது ஓர் ஆதாரமாக காணப்படும்.

## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் மொழிபெயர்ப்புகள் காணப்படுகின்றதா?

மூன்று மொழிகளிலும் அமைந்த பல சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரதிகள் பொதுமக்களின் பரிசீனைக்காக சம்பந்தப்பட்ட இடங்களில் காணப்படுகின்றன.

- வேண்டுகோள் விடுக்கப்பட்டால் மொழிபெயர்ப்புகள் வழங்கப்படல் வேண்டும். அவை வழங்கப்படாத வேளைகளில் வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம் அவற்றுக்கு உரிமை கோரி கிரின்த கடற்றொழில் துறைமுக செயற்றிட்டம் 1992 சம்பந்தமான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் சிங்கள மொழிபெயர்ப்பை பெற்றுள்ளது.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு மொழிபெயர்ப்புகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இணையத்தளம் / செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகளின் இணையத்தளங்கள் ஆகியவற்றில் கிடைக்கக்கூடியதாக உள்ளதென்பதை சமீபத்திய நடைமுறை அனுபவங்கள் காட்டுகின்றன.
- இருப்பினும், கிடைக்கக்கூடியதாக உள்ள மொழிபெயர்ப்பானது துல்லியமாகவும் நிறைவானதாகவும் இருத்தல் வேண்டும்.

## பொது மக்களின் கருத்துரையை மக்களால் பார்வையிட முடியுமா?

தற்போதைய நடைமுறையானது யாதெனில் பொதுமக்களை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர் ஒருவர் எழுத்துமூலமான வேண்டுகோளொன்றை முன்வைத்தாலன்றி மத்திய சுற்றாடல் அதிகார சபை, செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) மற்றும் செயற்றிட்ட முன்மொழிவாளர் ஆகியோர் மாத்திரமே பொதுமக்களின் கருத்துரையை பார்வையிட முடியும்.



## பொது விசாரணைகள் என்றால் என்ன? அவை எப்போது இடம்பெறும்?

- பொது விசாரணையொன்று இடம்பெற்றால் அது ‘பொதுமக்களின் நன்மைக்கு’ வழிசமைக்கும் என்று செயற்றிட்ட அங்கீகரிக்கும் முகவராண்மையானது கருதினால் அதன் தற்துணிவின் பிரகாரம் பொதுவிசாரணையொன்று இடம்பெறக்கூடும்.
- ‘பொதுமக்களின் நன்மை’ என்றால் என்ன?
    - i. முன்மொழியப்பட்ட செயற்றிட்டமானது மிகவும் சர்ச்சைக்குரியதாகவும் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு பொதுமக்களின் கருத்துரைகள் மிகவும் அவசியமாகவும் இருக்கும் வேளையில்.
    - ii. முன்மொழியப்பட்ட செயற்றிட்டமானது அசாதாரணமான தேசிய மற்றும் பிராந்திய தாக்கங்களை தோற்றுவிக்கும் சாத்தியம் உள்ள போது.
    - iii. முக்கியமான சுற்றாடல் உணர்வுபூர்வமான பிரதேசங்களை தேசிய ரீதியில் அச்சுறுத்தும் வேளையில்.
    - iv. ஒரு பொது விசாரணையொன்றுக்காக முறையான வேண்டுகோள் ஒன்றை ஆர்வமுள்ள தரப்பினரின் விடுத்திருக்கும் வேளையில்.
- பொது விசாரணையொன்றை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டால், அத்தகைய விசாரணையானது பொதுமக்கள் கருத்துரைக்கு வழங்கப்பட்ட 30 நாட்கள் காலக்கெடானது முடிவடைந்தவுடன் துரிதமாகவும் மற்றும் பொதுமக்கள் மற்றும் முகவராண்மைகளின் கருத்துரைகள் தொடர்பில் கருத்துரைக்குமாறு செயற்றிட்ட முன்மொழிவாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுவதற்கு முன்னரும் இடம்பெற வேண்டும்.



## சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய தீர்மானம்

செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிக்கின்றது. மீளாய்வின் நோக்கமானது யாதெனில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் செயன்முறை ஆகியவற்றை உறுதிசெய்வதாகும். மேலும் இச்செயற்பாடானது அனைத்து முக்கியமான மற்றும் ஒட்டுமொத்த தாக்கங்களுக்கும், சம்பந்தப்பட்ட அனைத்து தணிப்பு நடவடிக்கைகளுக்கும் இவ்வறிக்கை பரிகாரம் காண்கின்றதா என்பதையும் செவ்வை பார்க்கின்றது.

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டவாறு அனுமதியை வழங்கும் அல்லது ஒரு முன்மோழியப்பட்ட செயற்றிட்டத்தை நிராகரிக்கும்.
- மத்திய சுற்றாடல் அதிகார சபையானது செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையாக இல்லாதவிடத்து செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது அனுமதியை வழங்குவதற்கு முன்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சுற்றாடல் தாக்க மதிப்பீடானது சுற்றாடல் தடைநீக்கத்தை மாத்திரம் வழங்குகின்றது; செயற்றிட்ட முன்மொழிவாளர் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையிடமிருந்து சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கான அங்கீகாரத்தை பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட செயற்றிட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏனைய அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## கண்காணிப்பு

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வழிகாட்டி நூல் இல03ற்கு இணங்க, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் வெற்றியானது செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையினால் சுமத்தப்பட்டுள்ள நிபந்தனைகளை பயனுறுதியாக கண்காணிப்பதில் தங்கியுள்ளது. செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையினால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பானது நிபந்தனைகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்கு இசைவாக இடம்பெறுகின்றது.

மிகவும் அபிவிருத்தியடைந்த செயற்றிட்டங்கள் ஒழுங்கான கண்காணிப்பு குறிகாட்டிகளை உள்ளடக்குகின்றன. கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது சேகரிக்கப்பட்ட தகவல்கள் சுற்றாடல் முகாமைத்துவ திட்டத்தில் பட்டியலிடப்பட்ட முன்னுரிமைகள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்வதற்கு உதவுகின்றன.





## பூர்வாங்க தகவல் கோரிக்கைகள் என்பன யாவை?

செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் செயன்முறை பற்றிய வழிகாட்டிக்கு இணங்க ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அவசியமான ஒரு முன்மொழியப்பட்டுள்ள செயற்றிட்டமொன்றின் இயல்பு, அமைவிடம் மற்றும் தாக்கம் பற்றிய தகவல்களை அதன் ஆரம்பகால செயல்முறை கட்டத்திலேயே செயற்றிட்ட முன்மொழிவாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் பொறுப்புள்ளது. செவ்வை பட்டியல் மற்றும் கேள்விக்கொத்தானது மத்திய சுற்றாடல் அதிகார சபையில் கிடைக்கக்கூடியதாக உள்ளது. பூர்வாங்க தகவல்கள்:

- ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீடு அவசியமா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்கும் செயற்பாட்டில் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு உதவ முடியும்.
- பரப்பெல்லை செயன்முறையின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை இனங்காணும் செயற்பாட்டில் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு உதவ முடியும்.

## செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையின் தீர்மானம் தொடர்பில் மேன்முறையீடு செய்யலாமா?

- ஆம், நீங்கள் செயற்றிட்ட முன்மொழிவாளராகவும், உங்களது செயற்றிட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டும் இருப்பின், நீங்கள் சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு மேன் முறையீடு செய்யலாம்.
- பிரயோகிக்கக்கூடிய சட்டம்- தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23ஈஈ ஆம் பிரிவு மற்றும் வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு.

## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தலாமா?

- ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் படிமுறைகள் பின்பற்றப்படாவிட்டால் அத்துடன் செயற்றிட்டமானது அங்கீகரிக்கப்பட்டால், செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு எதிரான ரிட் மனுவொன்றை தாக்கல் செய்யலாம்.

  பம்புரேல்ல ஐரோ பவர் ஆனது, அங்கீகரிக்கும் முகவராண்மையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆனால் நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட்டது.

# சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகளில் பரிகாரம் காணப்படும் சுற்றாடல் தாக்கங்கள் யாவை?

a. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மூலம் பரிகாரம் காணப்படவேண்டிய மூன்று முக்கியமான பரப்புகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை இனங்காண்கின்றது.

b. இந்த பரப்புகளாவன: செய்றிட்டத்தின் மூலம் நேரடியாக **அல்லது மறைமுகமாக பாதிப்புக்கு உள்ளாகும் பௌதீக, உயிரியல் மற்றும் சமூக அம்சங்கள் ஆகும்.**

c. ஆகையால், **நீர் வளங்கள் மீதான தாக்கம், மாசுப் பிரச்சினைகள், மண் மற்றும் காணிப் பயன்பாட்டின் மீதான தாக்கம், வனங்கள், வனசீவராசிகள் மற்றும் உயிர் பல்வகைத்தன்மை மீதான தாக்கம், மற்றும் சமூக-பொருளாதாரம் மற்றும் கலாசார நிலைமைகள் மிதான தாக்கம்** ஆகியன பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

d. சுற்றாடல் தர்கக மதிப்பீட்டு அறிக்கையின் மேற்குறிப்பிடப்பட்ட பரப்புகள் / தலைப்புகள் மீதான பற்றாக்குறையான கரிசனையே செயற்றிட்டமொன்று செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையால் நிராகரிக்கப்படுவதற்கான ஒரு காரணமாக அமையலாம்.

- *வோட்ர்ஸ் எட்ஜ் வழக்கு* – முறையான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் சுற்றாடல் தாக்க அறிக்கையில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை என்பதை நீதிமன்றம் அவதானித்து. செயற்றிட்டத்தின் செலவினம் மற்றும் நன்மைகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதும் தணிப்பு நடவடிக்கைகளின் நம்பகத்தன்மையை ஆய்வுக்கு உட்படுத்துவதும் இன்றியமையாதது என்பதும் வலியுறுத்தப்பட்டது. செயற்றிட்டமானது பொதுமக்களின் நலன் சார்ந்திருக்கவில்லை என்ற தீர்ப்பை வழங்கிய நீதிமன்றம் நில உரிமை மாற்றத்தை பயனற்றதாக்கியது.
- *தென் அதிவேகப் பாதை மற்றும் கட்டுநாயக்க அதிவேகப் பாதை செயற்றிட்டங்கள்* – இவை பொதுமக்களின் கடும் எதிர்ப்புக்கு உட்பட்டன. செயற்றிட்டத்தை எதிர்த்து பல வழக்குகள் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த குடியிருப்பாளர்களால் தொடுக்கப்பட்டன என்பதுடன் அதன் விளைவாக செயற்றிட்டம் வருடக் கணக்கில் தாமதமானது.



# சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறையின் எக்கட்டங்களில் பொது மக்களின் பங்கேற்பு அவசியமாகின்றது?

இலங்கையானது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையில் பொதுமக்களின் கருத்துரைக்காக ஒரு பொறிமுறையை கொண்டுள்ளது. இந்த பொறிமுறையானது மத்திய சுற்றாடல் அதிகார சபையால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி நூல்களில் (EIA செயல்முறை எண்.03) காணப்படுகின்றது.

## பரப்பெல்லையிடல் செயன்முறை

a. பரப்பெல்லையிடல் செயற்பாடானது முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தினால் நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிப்புக்கு உள்ளாகும் மக்கள் அல்லது செயற்றிட்ட பிதேசம் மற்றும் அதன் சுற்றுச்சூழல் பற்றிய விசேடமான அறிவுடையோருடன் ஒரு தொடரான முறைசார் மற்றும் முறைசாரா கூட்டங்களை உள்ளடக்குகின்றது.

b. இச்செயற்பாடானது செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தை மதிப்பீடு செய்வதற்கும் சாத்தியமான சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் ஆரம்ப சுற்றாட்ல பரிசோதனை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் ஆய்வெல்லையை (TOR) தீர்மானிப்பதற்கு அவர்கள் கருதும் முக்கியமான மாற்று மூலோபாயங்களை இனங்காண்பதற்கும் உதவுகின்றது.

c. மேலும், இச்செயற்பாடானது ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கான யதார்த்தமானதும் அளவிடக்கூடிய இலக்குகள் மற்றும் நோக்கங்கள் வடிவமைக்கவும் உதவுகின்றது.

d. பரப்பெல்லையிடல் இரண்டு வகையானது: முறைசார் பரப்பெல்லையிடல் மற்றும் முறைசாரா பரப்பெல்லையிடல். இந்த இரண்டு வகையான கூட்டங்களும் எவ்விதமான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையிலும் ஒரு பாகமாக நடாத்தப்படல் வேண்டும்.

   i. **முறைசார் நுண்ணாய்வு** – ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டில் பரிகாரம் காண்பதற்காக பிரச்சினைகளை இனங்காண்பதற்கு செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு உதவும் வகையில் விரிவான அறிவு அல்லது அனுபவம் கொண்ட பாரியளவு மக்கள் கூட்டப்படுகின்றனர். அவர்கள் முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்திற்கு சாத்தியமான மாற்றீடுகளையும் இனங்காண்பர். ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை /சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பாக சட்ட நியாயாதிக்கத்துடன் அல்லது விசேட நிபுணத்துவத்துடன் கூட்டிணையும் முகவராண்மைகள் மற்றும் சுற்றாடல் தரங்களை விருத்திசெய்து அமுல்படுத்துவம் அதிகாரமளிக்கப்பட்ட முகவராண்மைகள் முறைசார் பரப்பெல்லையிடலில் கருத்துரை வழங்கவேண்டும். உதாரணம்: விடய பரப்பில் வல்லுநர்கள்: வனசீவராசிகள் உத்தியோகத்தர்கள், தேசிய கட்டிட ஆராய்சி தாபனத்தி;ன உத்தியோகத்தர்கள், விஞ்ஞானிகள், சட்டத்தரணிகள் மற்றும் அரசுசார நிறுவனங்கள் போன்ற அரசாங்க உத்தியோகத்தர்கள்.

   ii. **முறைசாரா நுண்ணாய்வு** – இச்செயற்பாடானது தனிநபர்கள் மற்றும் குழுக்களுடனான நேர்காணல்களை உள்ளடக்குவதுடன் காணப்படும் தரவுகளை மீளாய்வும் செய்கின்றது. இந்த

நேர்காணல்கள் முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தால் நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிக்கப்படும் மக்களுடன் களத்தில் நடாத்தப்படுகின்றன. உதாரணம்: உள்ளூர் கமக்காரர்கள். வர்த்தகர்கள், ஆசிரியர்கள் மற்றும் மதத் தலைவர்கள்

## செயற்றிட்ட முன்மொழிவாளர் / சுற்றாடல் தாக்க மதப்பீடு தயாரிப்போர் ஆகியோருடன் கலந்தாலோசித்தல்

a. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பை ஏற்படுத்தி முன்மொழியப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் சுற்றாடல் மீதான சாத்தியமான தாக்கங்கள் தொடர்பில் கலந்துரையாடுமாறு ஆலோசகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

b. பொதுமக்கள் செயற்றிட்ட முன்மொழிவாளரை தொடர்புகொண்டு அவர்களின் கரிசனையை வெளிப்படுத்துவதற்கு உரித்துடையவர்கள் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பொதுமக்கள் பங்கேற்பு கைந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

c. முன்மொழிவாளரின் அல்லது ஆலோசகரின் தொடர்வு விபரங்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபை அல்லது செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மை அல்லது அபிவிருத்தியாளர்கள் இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

## பொதுமக்கள் கருத்துரைக்கும் செயன்முறை

பொதுமக்கள் கருத்துரைக்கும் செயன்முறையானது தேசிய சுற்றாடல் சட்டத்தின் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் நடைமுறைபடுத்தும் வேளையில் வித்தியாசமடைகின்றது.

**தேசிய சுற்றாடல் சட்டம்**

- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மை பெற்றுக்கொண்டதும், அந்த அறிக்கை பற்றி பொதுமக்கள் தமது கருத்துரையை தெரிவிக்கும் முகமாக அத்தகைய அறிக்கையை எவ்விடத்தில் மற்றும் எந்நேரத்தில் பொதுமக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதை தெரிவிக்கும் அறிவித்தலானது தலா ஒரு பத்திரிகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படல் வேண்டும்.

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்தவ சட்டம்**

- ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையானது பற்றாக்குறையாக காணப்பட்டால், கரையோர பேணல் பணிப்பாளர் நாயகமானவர் சுற்றாடல் தாக்க மதிப்பீடொன்றை கோரலாம் அல்லது ஆரம்பத்தில் சுற்றாடல் தாக்க மதிப்பீடொன்றை கோரலாம் அல்லது ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு ஆகிய இரண்டும் தேவைப்படலாம்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீடானது கிடைக்கப்பெற்றதும், பொதுமக்கள் தமது கருத்துரையை பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கும் முகமாக அதனை அவர் வர்த்தமானியில் வெளியிடுவார்.





**தாவர விலங்கின பாதுகாப்பு கட்டளைச்சட்டம்**

- சம்பந்தப்பட்ட அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கை பற்றிய ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை பணிப்பாளர் நாயகம் பெற்றுக்கொண்டதும்; பொதுமக்கள் அத்தகைய ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய தமது கருத்துரையை அவருக்கு தெரிவிக்கும் முகமாக அறிக்கையானது வர்த்தமானியில் வெளியிடப்படும்.

**வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டம் -**

- ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மை பெற்றுக்கொண்டதும் அத்தகைய அறிக்கை தொடர்பில் பொதுமக்கள் தமது கருத்துரையை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு தெரிவிக்கும் முகமாக அத்தகைய அறிக்கையானது எவ்விடத்தில் மற்றும் எந்நேரத்தில் பொதுமக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதை தெரிவிக்கும் அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்பட்டு அதனைத்தொடர்ந்து தலா ஒரு பத்திரிகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிளம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும்.

## நிறைவுபெற்ற செயற்றிட்டதின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை மேற்கொள்பவர்கள் யார்?

a. செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மை / மத்திய சுற்றாடல் அதிகார சபையானது (PAA/ CEA) கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை நடாத்துகின்றது. இச்செயற்பாட்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அலுவலகங்கள் ஈடுபடுகின்றதுடன் செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மையானது செயற்றிட்டம் அங்கீகரிக்கும் செயற்பாட்டில் நிபந்தனைகளை உள்ளடக்கலாம்.

b. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடானது சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு திட்டத்திற்கிணங்க பல கட்டங்களில் இடம்பெறுகின்றது.

c. இருப்பினும், கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ சட்டம் மற்றும் தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டமானது அங்கீகரிப்புக்கு பின்னரான கண்காணிப்பு சம்பந்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளை கொண்டிருக்க வில்லை.



## வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம் எவ்வாறு உதவுகின்றது?

வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றமானது (EFL) இலங்கையின் சனநாயக உரிமைகள் மற்றும் சுற்றாடல் பேணுகை ஆகியவற்றை வலுவூட்டும் வகையில் வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றமானது இவ்விதமான முயற்சிகளால் அறிவை பகிர்ந்தளித்து மக்களின் சுற்றாடல் உரிமைகள் பற்றிய பொதுக் கண்ணோட்டத்தை வடிவமைப்பதில் முனைப்பான ஒரு வகிபாகத்தை வகிக்கின்றது.

அவ்வாறே, வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றமானது சட்ட நடவடிக்கை தொடர்வதோடு சேர்த்து ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ள தொழில்நுட்ப வாசகங்களை விளக்குவதுடன் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை/ சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய அறிக்கைகளை செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு அனுப்புகின்றது.

உங்கள் அல்லது உங்களது கிராமம் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை சமர்ப்பிக்காத அல்லது சுற்றாடல் தாக்க மதிப்பீடானது காலாவதியான ஒரு விதித்துரைக்கப்பட்ட செயற்றிட்டத்தின் ஆரம்பம் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகியிருப்பின் உங்களுக்கு என்ன தீர்வுகள் உண்டென்பதை அறிய எம்மை தொடர்பு கொள்ளவும்.



# மேற்கோள்களின் பட்டியல்

### வழக்குச் சட்டம்

- அமரசிங்க மற்றும் ஏனையோர் எதிர் சட்டமா அதிபர் மற்றும் ஏனையோர் (கொழும்பு -கட்டுநாய்கக அதிவேகப் பாதை வழக்கு) [1993] 1 Sri LR 376
- புலன்குலம மற்றும் ஏனையோர் எதிர் செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏனையோர் (எப்பாவெல வழக்கு) [2000] 3 Sri LR 243
- வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம் எதிர் செயலாளர், வனவியல் மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் ஏனையோர் (மேல் கொத்மலை நீர்மின்சக்தி வழக்கு) [1999] CA.No. 1023/98
- வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம் எதிர் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஏனையோர் (போமுரேல்ல மினி ஐரோ பவர் செயற்றிட்ட வழக்கு) [2006] 3 Sri LR 57
- ஹீதர் தெரேஸ் மன்டி எதிர் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் ஏனையோர் உயர் நீதிமன்ற மேன் முறையீடு 58/2003
- சுகதபால மெண்டிஸ் மற்றும் ஏனையோர் எதிர் சந்திரிகா குமாரணதுங்க மற்றும் ஏனையோர் (வோட்டர்ஸ் எட்ஜ் வழக்கு) [2008] 2 Sri LR 339

### நியதிச்சட்ட விதிகள்

- 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ சட்டம் (திருத்தப்பட்டவாறு)
- 1937ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தாவர விலங்கினப் பாதுகாப்பு கட்டளைச்சட்டம் (திருத்தப்பட்டவாறு)
- 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் (திருத்தப்பட்டவாறு)
- 1990 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டம்

### நியதிச்சட்டங்களின் கீழ் வழிகாட்டிகள்

- மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையை நடைமுறைப் படுத்துவதற்கான வழிகாட்டி: இல 01-செயற்றிட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகான ஒரு பொது வழிகாட்டி (4 வது பதிப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபை 2006)
- மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையை (EIA) நடைமுறைப் படுத்துவதற்கான வழிகாட்டி:
- இல 2- சுற்றாடல் நுண்ணாய்வை நடைமுறைப் படுத்துவதற்கான ஒரு பொது வழிகாட்டி (3 வது பதிப்பு, மத்திய சுற்றாடல் அதிகார சபை,2006)
- மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயன்முறையை (EIA) நடைமுறைப் படுத்துவதற்கான வழிகாட்டி: இல 3-பொது மக்கள் பங்கேற்றல் கைந்நூல் (1 வது பதிப்பு, மத்திய சுற்றாடல் அதிகார சபை,1998)
- மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் தாக்க மதிப்பீடு பற்றிய எளிமையான வினாக்களும் விடைகளும் (2 வது பதிப்பு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, 2005)

## நூல்கள் மற்றும் அறிக்கைகள்


- வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம், 'இலங்கையிள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின்; கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால செயன்முறைகள்: இடைவெளி மற்றும் தேவைகள் பற்றிய மீளாய்வு '(2020)
- வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம், உங்களது சுற்றாடல் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்: இலங்கைக்கான ஒரு கைந்நூல்- திருத்திய பதிப்பு-1 (2வது பதிப்பு, வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம்-2019)


## இணையத்தளங்கள்


- மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணையத்தயத்தை அணுகும் வழி <http://www.cea.lk/web/component/content/article?id=94> 2022 சனவரி 12 அணுகப்பட்டது


# குறிப்புகள்

# குறிப்புகள்

வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) சுற்றாடல் மன்றமானது (EFL) அறிவியல் ஆய்வுகள் மற்றும் பேணுகை செயற்றிட்டங்கள் ஊடாக பொது நலன்சார் வழக்காடல் மற்றும் சுற்றுக்சூழல் பரிந்துரை வழங்கல் ஆகியவற்றில் ஈடுபடும் ஒரு இலாப-நோக்கமற்ற நிறுவனமாகும். இந்த மன்றமானது கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துவதில் கருவியாகச் செயற்பட்டு வருவதுடன் கழிவு முகாமைத்துவம் முதல் உயிர் பல்வகைத்தன்மை பேணுகை வரையிலான பல்வேறு தலைப்புகள் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது.

1981ஆம் ஆண்டு முதல், வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றமானது (EFL) இலங்கை இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாட்டிற்கு தலைமைதாங்கும் ஒரு பக்கச்சார்பற்ற மற்றும் அரசியல் சார்பற்ற நிறுவகமாக இனங்காணப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றமானது (EFL) சுற்றாடல் பேணுகைக்கு அனுசரணை வழங்கும் வகையில் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு சட்ட மற்றும் அறிவியல் ஆதரவையும் வழங்கிவருகின்றது.

கடந்த நான்கு தசாம்தங்களாக, வரையறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றமானது இலங்கையில் சுற்றாடல் நீதியை வலுவூட்டுவதில் ஒரு உந்து சக்தியாக அதனை தாபித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) சுற்றாடல் மன்றம்
3ஏ, 1வது ஒழுங்கை, கிருலப்பனை, கொழும்பு 05.

mail@efl.lk | (+94) 112890984 | www.efl.lk

Celebrating 40 years
Justice for Nature
1981-2021